**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**,முன்னிலை:–திருமதி.S.சப்னா, B.B.M.,L.L.M**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**E–Crl.M.P.No.210/2026**

N.மகாலிங்கம் (வயது 58),
த/பெ. நாச்சிமுத்து,
No,3/151 R.புதுப்பாளையம்,
பொல்லி காளிபாளையம்,
திருப்பூர் மாவட்டம். ..... மனுதாரர்/புகார்தாரர்

/ எதிர் /

மாநில அரசின் சார்பாக
காவல் துறை உதவி ஆய்வாளர்,
அவினாசி பாளையம், காவல்நிலையம்,
திருப்பூர். ...எதிரி

**உத்தரவு**

இம்மனுவானது பாகுபாச பிரிவு 175(3)ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2) மனுதாரர்/புகார்தாரர் விவசாயம் மற்றும் நிதி உதவி செய்யும் தொழில் செய்து வருவதாகவும் எதிரி ஞானசிவமூர்த்தி மனுதாரரின் குடும்ப நண்பராவார் எதிரி கடந்த 06.01.2025 ம் நாளன்று ரூ.7,00,000/– தொகையை எதிரி செய்து வரும் பனியன் தொழில் வளர்ச்சிக்கு 6 மாதத்திற்குள் வட்டியுடன் திருப்பி தருவதாக கூறி கடனாக பெற்றதாகவும் மனுதாரர் மேற்படி தொகையில் ரூ.2,00,000/–ஐ நேரடியாகவும் அதே நாளில் ரூ.4,00,000/–தொகையை சுயகாசோலை மூலம் பணப்பரிமாற்றம் செய்ததாகவும் பின்னர் புகார்தாரர் கடந்த 25.06.2025 ம் நாளன்று எதிரியை அணுகி மேற்படி கடன் தொகையை திருப்பி தருமாறு கேட்டபோது எதிரி 26.06.2025 தேதியிட்ட வங்கிக் கணக்குள்ள HDFC வங்கியின் 554236 என்ற எண்ணிட்ட காசோலை ரூ.7,00,000/– தொகையை நிரப்பி கொடுத்ததாகவும் பின்னர் புகார்தாரர் மேற்படி காசோலையை எதிரி

கேட்டுக் கொண்டபடி கடந்த 26.06.2025ம் நாளன்று அவரது வங்கி கணக்குள்ள சௌத் இந்தியன் வங்கி கொடுவாய் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது மேற்படி காசோலையானது காலாவதியான பழைய காசோலை பரிமாற்றம் செய்ய இயலாது என கூறி திருப்பி கொடுத்துவிட்டனர்.

3)பின்னர் புகார்தாரர் எதிரி மீது காலாவதியான காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளார் எனக் கூறி கடந்த 17.11.2025ம் நாளன்று அவினாசி பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் காவல்துறையினரும் எதிரியை அழைத்து விசாரித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மனுதாரரை நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வருமாறு கூறி விட்டதாகவும் மேற்படி காவல்துறையினர் CSR மட்டும் பதிவு செய்து கொடுத்ததோடு மேற்கொண்டு எதிரிமீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் புகார்தாரர் 23.01.2026ம் நாளன்று பல்லடம் காவல் துணை கண் காணிப்பாளரிடம் புகார் அளித்ததாகவும் மேற்படி காவல் துணைக் கண்காணிப்பாளரும் எதிரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை பின்னர் புகார்தாரர் 12.02.2026 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்ததாகவிம் மேற்படி காவல்துறையும் கைவிட்டதால் மனுதாரருக்கு மாண்பமை நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது மேற்படி காவல் துறையினருக்கு அனுப்பப்பட்ட புகார் மனு தபால் ரசீது மற்றும் தபார் ஏற்பு அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4)எதிரி திட்டமிட்டு புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்தோடு இந்த பழைய கால வதியான காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளார். ஆகவே எதிரி பாரதிய நீதி விதித் தொகுப்பு சட்டப்பிரிவு 318ன் கீழ் குற்றமிழைத்துள்ளார். எதிரி மீது எதிர்மனுதாரர் காவல்துறையினரை புலன் விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுத்திட உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5)எதிர்மனுதாரர்/காவல்நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலறிக்கையில் கடந்த 17.11.2026 ம் தேதி அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் ரெங்கசாமி கவுண்டர் மகன் ஞானசிவமூர்த்தி என்பவர் தன்னிடம் கடந்த 06.01.2025 ம் தேதியன்று ரூ.7,00,000/–தொகையை பெற்று 6 மாதத்தில் திரும்ப செலுத்திவிடுவதாகவும் மேற்படி தொகைக்கு ரூ.100/– க்கு மாதம் 1.2% வட்டி கொடுப்பதாக கூறி கடனாக பெற்றுச் சென்றதாகவும் பின்னர் ஞானசிவமூர்த்தி கடன் தொகைக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையை பலமுறை கேட்டு செலுத்தாததால் மனுதாரர் கடந்த 25.06.2026 ம் தேதி எதிர்மனுதாரர் ஞான சிவமூர்த்தியை நேரில் சந்தித்து கடன் தொகையை கேட்டபோது 26.06.2026 ம் தேதியிட்ட அவரது வங்கி கணக்குள்ள HDFC வங்கி கிளையின் காசோலையில் ரூ.7,00,000/–த்தை பூர்த்தி செய்து கொடுத்ததாகவும் மனுதாரர் 26.06.2025 ம் தேதியன்று தனது வங்கி கணக்குள்ள கொடுவாய் சௌத் இந்தியன் வங்கி கிளையில் மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது மேற்படி காசோலையானது காலவதியான பழைய காசோலை எனவும் பரிமாற்றம் செய்ய இயலாது என வங்கி நிர்வாகம் கூறிவிட்டதாகவும் இதுசம்மந்தமாக மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் கடந்த 17.11.2026 ம் தேதி அவினாசிபாளையம் காவல்நிலைய மனு ரசீது எண். 347/2025 நாள். 17.11.2025 தேதியன்று வழங்கியதாகவும் உதவிஆய்வாளர் இரு தரப்பினரையும் கடந்த 03.12.2025 ம் தேதி அழைத்து விசாரித்தபோது அவரது விசாரணையில் இருவரும் நீதிமன்றம் நாடி நிவாரணம் தேடிக்கொள்வதாக இருவரும் எழுதிக் கொடுத்ததன் பேரில் மேற்படி மனு இரசீது 03.12.2025 ம் தேதியன்று முடிக்கப் பட்டதாக பதிலறிக்கை கொடுக்கப் பட்டுள்ளது.

6)இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது புகார்தாரிடமிருந்து எதிரி ஞானசிவமூர்த்தி செய்து வரும் பனியன் தொழில் வளர்ச்சிக்கு பணம் தேவைப்படுவதாக கூறி கடந்த 06.01.2025 ம் தேதியன்று ரூ.7,00,000/– தொகையை 6 மாதத்திற்குள் வட்டியுடன் திருப்பி தருவதாக கூறி

கடனாக பெற்றதாகவும் மனுதாரர் மேற்படி தொகையில் ரூ.2,00,000/−ஐ நேரடியாகவும், அதே நாளில் ரூ.4,00,000/− தொகையை காசோலை மூலம் பணப்பரிமாற்றம் செய்ததாகவும் புகார்தாரர் கடந்த 25.06.2025 ம் தேதியன்று எதிரியை அணுகி கடன் தொகையை திருப்பித்தருமாறு கேட்டபோது எதிரி 26.06.2025 தேதியிட்ட HDFC வங்கியின் 554236 என்ற எண்ணிட்ட காசோலை ரூ.7,00,000/− தொகையை நிரப்பி கொடுத்ததாகவும், எதிரி கேட்டுக் கொண்டபடி கடந்த 26.06.2025 ம் நாளன்று அவரது வங்கி கணக்குள்ள சௌத் இந்தியன் வங்கி கொடுவாய் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது காசோலையானது காலாவதியான பழைய காசோலை பரிமாற்றம் செய்ய இயலாது என்று கூறி திருப்பி கொடுத்துவிட்டதாகவும் எதிரி காலவதியான காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளதாக கூறி கடந்த 17.11.2025 ம் நாளன்று அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் மேற்படியான புகாரின் மீது CSR மட்டும் பதிவு செய்து கொடுத்ததோடு மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பின்னர் 12.02.2026 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்ததாகவும் காவல் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் இம்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர்/ காவல்நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப் பட்டுள்ள பதிலறிக்கையில் இருதரப்பினர்களும் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் பெற்றுக் கொள்வதாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இருதரப்பினர்களுக்கும் உள்ள பிரச்சனையானது கொடுக்கல் வாங்கல் சார்ந்த பிரச்சனை என்பதால் இதுகுறித்து நமது மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை Noor Deen Vs Commission of Police and another (Crl.RC.(MD) No. 826/2024 என்ற தீர்ப்பு முடிவில் பாரா 8 ல் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

> 8. ..........................It is settled law that the Judicial Magistrate, while exercising power under Section 156(3) Crpc Cannot act as a post office and is duty bound to consider the nature of the accusation or the offences alleged and to decide about the court of action to be taken and it cannot be said that the order or Judicial Magistrate refusing to direct the police to register

> an FIR., Completely shut out all the opportunities for the complainant. If the petitioner is having necessary particulars and materials to show a prima facie case against the proposed accused, he can very well file a private complaint under section 200Crpc and there is absolutely no bar or prohibition for filing a private complaint on the ground that the petition filed under section 156(3) Crpc was dismissed by the Magistrate.

மேற்படியான தீர்முடிவானது இந்த வழக்கிற்கு பொருத்தகூடியதாக உள்ளது. மனுதாரர் மற்றும் எதிரி ஞானசிவமூர்த்திக்கு இடையேயான பிரச்சனை பண பரிவர்த்தனையானது என்பதால் உரிய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தீர்வு பெற்றுக் கொள்ளுமாறும் இம்மனுவில் புலன் விசாரணை செய்ய காவல் துறையினருக்கு அறிவுறுத்த எவ்விதமான முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப் படுகிறது.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.06.12 21:05:44 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**<u>மனுதாரர் தரப்பு ஆவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஆவண எண்.1 | 26.06.2025 | எதிரியின் செல்லாத காசோலை அசல் |
| ஆவண எண்.2 | 11.07.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| ஆவண எண்.3 | 17.11.2025 | காவல்துறைக்கு அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் |
| ஆவண எண்.4 | 17.11.2025 | காவல் துறையினரின் புகார் மனு ரசீது அசல் |
| ஆவண எண்.5 | 23.01.2026 | காவல் துணைக்கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் |
| ஆவண எண்.6 | | தபால் ஏற்பு அட்டை அசல் |
| ஆவண எண்.7 | 12.02.2026 | மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் |
| ஆவண எண்.8 | | தபால் ஏற்பு அட்டை அசல் |
| ஆவண எண்.9 | | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.06.12 21:05:51 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.